**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**CC 230/2025**
LW 4 PW 4

| | | | |
|---|---|---|---|
| Name | அரவிந்த் (எ) அரவிந்த்ராஜ் | Caste | |
| Father's/Husband Name | ரவிச்சந்திரன் | Calling | |
| Village | காரைநகர், திருப்பூண்டி | Religion | |
| Taluk | | Age | 30 /**2026** |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969

(Central Act 44 of 1969) on the 3rd **day of March 2026**

Signature of witness.

**1ம் எதிரி ஆஜர் 2ம் எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கம்பி பிட்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த வருடம் தமிழ் வருடப்பிறப்பு அன்று காரைநகர் புதுப்பாலம் அருகே கூட்டமாக இருந்தது. நான் அங்கு சென்று பார்த்ததில் விபத்து நடந்திருந்தது. ரோட்டின் மறுபுறம் இரண்டு பேரும் கூட்டமாக இருந்த இடத்தில் இரண்டு பேரும் அடிப்பட்டு கிடந்தார்கள். அப்போது அங்கு வந்திருந்த போலீசார் என்னிடம் விசாரித்தார்கள். சம்பவம் பற்றி வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்ததால் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 14.04.2025 ம் தேதி மாலை நானும் நவீன் என்பவரும் புதுப்பாலம் அருகில் உள்ள

பெட்டிக்கடைக்கு சென்று சாமான்கள் வாங்கி கொண்டு ஈசிஆர் சாலை புதுப்பாலம் அருகே நின்று பேசி கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த passion pro இரு சக்கர வாகனத்தின் மீது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த Benz lorry க்கு பின்னால் அதே திசையில் வந்த yamaha ray scooty இரு சக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் லாரிக்கு வலது பக்கம் ஏறி அதி வேகமாக ஓட்டி வந்து அவர்களுக்கு எதிர் திசையில் வந்த passion pro வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும் அடிப்பட்டவர்களை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தது குறித்தும் விபத்தை நான் பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது போலீசார் விசாரணைக்கு மாறுப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/–ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.